# தொண்டைமானாறு வெளிக்கள நிலையம் நடாத்தும்
## ஆறாம் தவணைப் பரீட்சை - 2021
# Conducted by Field Work Centre, Thondaimanaru.
## 6th Term Examination – 2021

FWC

| | | | | |
|---|---|---|---|---|
| அரசியல் விஞ்ஞானம் I<br>Political Science I | Two Hours<br>Gr -13 (2021) | 23 | T | I |

**அறிவுறுத்தல்கள்**

- **இவ்வினாத்தாள் A, B ஆகிய இரண்டு பகுதிகளைக் கொண்டுள்ளது.**
- **பகுதி A பல்தேர்வு வினாக்கள் 30 இனையும் பகுதி B குறுவிடை வினாக்கள் 20 இனையும் கொண்டுள்ளது.**
- **சகல வினாக்களுக்கும் இவ்வினாப்பத்திரத்திலேயே விடையளித்தல் வேண்டும்.**
- **ஒவ்வொரு வினாவுக்கும் 2 புள்ளிகள் வீதம் மொத்தம் 100 புள்ளிகள் வழங்கப்படும்.**

## பகுதி A

- ***1 முதல் 15 வரையான வினாக்களுக்கு மிகச்சரியான அல்லது மிகப்பொருத்தமான விடையைத் தெரிவு செய்க.***

01. அரசியல் விஞ்ஞானம் என்பது,
   1) அறிவாதாரமுறையியலாகும்.
   2) பௌதீக விஞ்ஞானங்களில் இருந்து சமூக விஞ்ஞானங்களுக்கு உள்வாங்கப்பட்டது.
   3) அரசியல் கோட்பாட்டு பகுதியை கற்பதுடன் வரையறுக்கப்பட்டது.
   4) தத்துவம், சிந்தனை, கோட்பாடு, கருத்தியல் ஆகிய பகுதிகளை உள்ளடக்கிய கற்கை நெறியாகும்.
   5) அரசு, அரசாங்கம், அதிகாரம் மற்றும் அதிகார ஸ்தாபனங்கள் என்பவற்றுடனான தொடர்பாடல் செயற்பாடாகும். (………..)

02. அரசியல் என்பது
   1) அரசு மற்றும் சமூகம் என்பவற்றுக்கிடையில் நிலவும் அதிகார தொடர்பு ஆகும்.
   2) சமூக உயர் வரப்பிரசாதங்களைப் பெற்ற நபர்களுக்கென மட்டுப்படுத்தப்பட்ட ஒரு செயற்பாடாகும்.
   3) எதிர்பார்க்கப்பட்ட இலக்குகளை எதிர் ஜனநாயக வழிமுறைகளினூடாக மாத்திரம் அடைய முற்படும் அதிகார போராட்டமாகும்.
   4) ஜனநாயக வழிமுறைகளினூடாக மட்டும் சாத்தியமாகக்கூடிய செயற்பாடாகும்.
   5) அரசியல் கட்சிகளின் செயற்பாடுகளுடன் வரையறுக்கப்பட்டதாகும். (………..)

03. அரசியல் விஞ்ஞான கற்கைக்கான அணுகுமுறைகளுடன் சரியாக பொருந்தும் கூற்றினை இனங் காண்க.
   1) தத்துவார்த்த அணுகுமுறை – அனுபவ வாதத்தின் அடிப்படையில் அரசியலை கற்றல்.
   2) ஒப்பீட்டு அணுகுமுறை – வேறுபட்ட அரசாங்க முறைகளை ஒப்பிடுவதன் மூலம் அரசியலை கற்றல்.
   3) சமூகவியல் அணுகுமுறை – இலட்சிய வாதத்தின் அடிப்படையில் அரசு, அரசாங்கம் என்பவற்றை கற்றல்.
   4) அரசியல் பொருளாதார அணுகுமுறை – மனிதகுழுக்களின் அரசியல் நடத்தையை அவதானித்தல் மற்றும் ஆய்வுசெய்தல் பற்றிய கற்றல்.
   5) நடத்தைவாத அணுகுமுறை – ஐரோப்பிய நவமாக்சிச வாதிகளால் ஆரம்பிக்கப்பட்ட கற்றல்முறை (………..)

04. அரசியல் கட்சிகள் என்பது.

1) அனைத்தாண்மை முறைகளில் போட்டித் தன்மையுடன் செயற்படுகிறது.
2) அரசாங்க செயற்பாடுகளில் இருந்து மக்களை தூரப்படுத்துகின்றது.
3) மக்களை அரசியல் செயற்பாடுகளில் நேரடியாக ஈடுபட வைக்கின்றது.
4) ஐரோப்பா மற்றும் அமெரிக்க அரசியலில் இரண்டாம் உலக யுத்தத்தின் பின் பரவிய அரசியல் இயக்கமாகும்.
5) முக்கியமான அரசியல் பிரச்சினைகளின்போது மக்களை விழிப்புடன் இருக்க தூண்டுகின்றது.

(………..)

05. அமுக்க குழுக்கள் என்பது.

1) இவற்றின் வளர்ச்சியும் பரவலும் அரசியல் அபிவிருத்திக்கான சவாலாகும்.
2) சமூகத்தின் பொது நலன்களை ஒன்று திரட்டி அதனை அடைவதை இலக்காக கொண்ட குழுக்களாகும்.
3) ஆசைக் குழுக்கள், அழுத்தக் குழுக்கள், நியாயப் பிரச்சாரக் குழுக்கள், நலன்பேண் குழுக்கள் எனவும் அழைக்கப்படுகிறது.
4) அனைத்தாண்மை அரசியல் முறைகளில் பூரண சுயாதீனமாக செயற்படுகின்ற குழுக்களாகும்.
5) அரச அதிகாரத்தை கைப்பற்றுவதற்காக அரசியல் கட்சிகளுக்கு பதிலீடாக உருவாக்கப்பட்ட மக்கள் குழுக்களாகும். (………..)

06. அரசு என்பது.

1) கட்டாயமானதும் அனைத்துலகத் தன்மை பொருந்தியதுமான நிறுவனமாகும்.
2) நீண்ட வரலாறு இல்லாத சமூக தோற்றப்பாடாக காணப்படுகிறது.
3) கால அடிப்படையில் சமூகத்திற்கு மேம்பட்டதாகும்.
4) ஏனைய சமூக நிறுவனங்களுக்கு ஈடானதாகும்.
5) பிரஜைகளின் இருப்பு கட்டாயமற்ற சமூக நிறுவனமாகும். (………..)

07. அரசாங்கம் என்பது

1) ஜனநாயக வழிமுறைகளில் வரையறுக்கப்பட்ட காலப் பகுதிக்கு என மக்களால் தெரிவு செய்யப்படும் ஸ்தாபனமாகும்.
2) வலுக்கட்டாயமான உறுப்புரிமையை கொண்ட அதிகார ஸ்தாபனமாகும்.
3) இறைமை அதிகாரத்தின் ஏக உரித்தாளனாகும்.
4) அரசின் ஆள்புல எல்லைக்குட்பட்ட அனைவரதும் பொது விருப்பினை பிரதிநிதித்துவப்படுத்தும் ஸ்தாபனமாகும்.
5) தாராள ஜனநாயக முறைகளில் மட்டும் நடைமுறை சாத்தியமாகக்கூடிய அமைப்பு ஆகும்.

(………..)

08. பின்வரும் அரச முறைகளின் பண்புகளை சரியாக காட்டுவது.

1) தாரள ஜனநாயக அரசு - அரசின் பூரண கட்டுப்பாட்டுக்குட்பட்ட பொருளாதாரமுறைகள்.
2) சமவுடமை அரசு - அரசு சகல சமூக கட்டங்களிலும் நித்தியமாக நிலைத்திருக்கும்
3) பாசிச அரசு - அனைத்தும் அரசாகும் தனிமனிதன் பூச்சியமாகும் அரசின் அதிகாரம் எல்லையற்றதாகும்.
4) முடியாட்சி அரசமுறை - அரச அதிகாரங்கள் பணிசார் அடிப்படையில் வேறுபடுத்தப்படடு வெவ்வேறு அரசியல் நிறுவனங்களுக்கு பொறுப்பாக்கப்பட்டமை
5) நவீன ஆள்புல அரசு - வரையறுக்கப்பட்ட ஆள்புலம், தேசிய அடிப்படை, அரசாங்கம், இறைமை, தேசிய படையணி ஆகிய பிரதான அங்கங்களை நவீன ஆள்புல அரசுகள் அடிப்படையாகக் கொண்டுள்ளன. (………..)

09. கூட்டாண்மை சமஸ்டி முறை என்பது.

1) பலமான மத்திய அரசாங்கமும் பலவீனமான பிராந்திய அரசாங்கங்களும் காணப்படும்.
2) பாதுகாப்பு, வெளிவிவகாரம், பொது பண அலகு போன்ற பிரச்சினைகளுக்கு முகம்கொடுக்கும் வகையில் உருவாக்கப்பட்டது.
3) உலகில் சிறப்பான ஒரு அரசாங்க முறை என அனைவராலும் அங்கீகரிக்கப்பட்டுள்ளது.
4) பிராந்திய அரசாங்கங்களின் அதிகார பரப்பினை மத்திய அரசாங்கமே தீர்மானிக்கின்றது.
5) விசேட இலக்கினை அடைந்து கொள்வதற்காக இறைமையுடைய தேசிய அரசுகளால் மத்திய அரசாங்கத்திற்கு அதிகளவு அதிகாரத்தை வழங்கி ஏற்படுத்தி கொண்ட அரசாங்க முறையாகும்.

(………..)

10. அணைத்தாண்மை அரசாங்கமுறையின் விசேட பண்பானது.

1) திடமான அரசியல் பொருளாதார கருத்தியல் காணப்படல்.
2) போட்டிக் கட்சிமுறை, சுயாதீனமான ஊடகம் போன்றவற்றின் இருப்பு.
3) தம்மைதாமே நியமித்துக் கொண்ட ஆட்சியானன் வரையறைக்குட்பட்ட காலப்பகுதியில் ஆட்சி அதிகாரத்தை பிரயோகித்தல்.
4) அரசாங்கம் தொடர்பான மக்களின் கருத்திற்கு மதிப்பளித்தலும், காலகால தேர்தல்களும் காணப்படல்.
5) அரசியலமைப்பு மற்றும் வேறு சட்டமுறைகள் போன்றவற்றால் வரையறுக்கப்படாத ஆட்சியாளனின் தான்தோன்றித்தனமான அதிகாரம். (………..)

11. குடியரசுவாதம் என்பது.

1) தாராண்மை வாதத்திற்கு எதிராக எளிற்சியடைந்த ஒரு கருததியலாகும்.
2) அரசின் தலைவனாகிய மன்னனுக்கு ஆட்சியதிகாரம் பரம்பரை முறையில் கையளிக்கப்பட்டது என்பதை வலியுறுத்துகின்றது.
3) இறைமையின் உடமையாளன் மக்கள் அல்ல அது ஆட்சியாளனே அல்லது அரசனேயாகும் என்பதை வலியுறுத்துகின்றது.
4) பழமை குடியரசு வாதம் கி.மு. நான்காம் நூற்றாண்டு வரை நீண்ட வரலாற்றினையுடைய எண்ணக்கருவாகவும் தத்துவமாகவும் காணப்படுகிறது.
5) மக்கள் இறைமை என்னும் எண்ணக் கருவினை புறந்தள்ளியுள்ளது. (………..)

12. மதசார்பின்மை வாதம் என்பது.

1) அரசின் பாதுகாலனான திருச்சபையின் இருப்பினை வலியுறுத்துகின்றது.
2) சமயத்துறை, அரசதுறை ஆகிய இருதுறைகளின் சுயாதீனத்தினை வலியுறுத்துகின்றது.
3) சமயத்தின் வளர்ச்சி, மேம்பாடு என்பவற்றின் அரசின் இன்றியமையாத தன்மையை வலியுறுத்துகின்றது.
4) சமய அடையாளத்துடன் அரசியல், சிவில் சமூக இயக்கங்களின் செயற்பாட்டிற்கு சமவுடமை வாத மதசார்பின்மை வாதம் அங்கீகாரம் அளித்துள்ளது.
5) சமய கற்கைக்கும், பிரசாரத்திற்கும் அரச பங்களிப்பின் அவசியத்தை தாரண்மை மதசார்பின்மை வாதம் வலியுறுத்துகின்றது. (………..)

13. அரசுகளுக்கிடையிலான முரண்பாடு உருவாக காரணமாக அமைவது.

1) எல்லைகள் அல்லது வளப்பங்கீடுகள் சரியாக வரையறை செய்யப்படாமையால் ஏற்படும் முரண்பாடுகள்.
2) அரசில் உள்ள குழுக்கள் மற்றும் சமயக் குழுக்களின் துன்பம், துயரம் சாரியாக தீர்க்கப்படாமை தொடரபான முரண்பாடுகள்.
3) அரசிலுள்ள சமூகக்குழுக்களுக்கிடையில் பல்வேறு நோக்கங்கள் மற்றும் அபிலாசைகளின் அடிப்படையில் ஏற்படும் முரண்பாடுகள்.
4) அரசுகளில் காணப்படும் சகல இனத்துவ, கலாசாரக் குழுக்களையும் உள்ளடக்கிக் கொள்ளப்படாத இனவாத கருத்தியல்கள் காணப்படல்.
5) அரசொன்றின் பல்லின சமூக கட்டமைப்புகளில் அரசியல் ஒருமைத்தன்மையை ஏற்படுத்திக் கொண்டு செல்வதற்கான அரசு ஒன்று தோற்றம் பெறாமை. (………..)

14. இலங்கையின் காலனித்துவ மாற்றங்களின் போதான சாதகமான விளைவு

1) இனவாரி பிரதிநிதித்துவ முறையின் அறிமுகத்தால் இனங்களுக்கிடையில் இனவாதம் வளர்ச்சியடைந்தமை.
2) வர்த்தக பயிற்செய்கையில் ஈடுபடுவதற்கு இந்திய தொழிலாளர்கள் வருகை தந்தமையால் இலங்கையில் இந்திய வம்சாவழி தமிழர் பிரச்சினைகள் உருவாகியமை.
3) கல்வி மற்றும் சொத்து அடிப்படை நிபந்தனைகளுக்குட்பட்டு வாக்குரிமை வழங்கப்பட்டமையால் அரசியல் உரிமைக்கான அடித்தளமிடப்பட்டமை
4) மரபுவழி வந்த குடியான் விவசாய செய்கைக்கு உற்சாகமளிக்கப்படாமை
5) பெருந்தோட்டப் பயிர்ச்செய்கையின் அறிமுகத்துடன் மலையகப் பகுதிகளில் நிலப்பிரச்சினை தீவிரமடைந்தமை. (………..)

15. 1931இல் டொணமூர் ஆணைக்குழுவினரால் முன் வைக்கப்பட்ட சீர்திருத்தங்களில் ஒன்று.

1) பிரதேச அடிப்படையிலான பிரதிநிதித்துவ முறையின் உருவாக்கத்திற்கு அடித்தளமிட்டமை.
2) சட்டவாக்க அதிகாரங்களுடன் வரையறுக்கப்பட்ட அரசுக்கழகம் உருவாக்கப்பட்டமை.
3) கூட்டுப் பொறுப்புடன் கூடிய அமைச்சரவை முறை சிபார்சு செய்யப்பட்டமை
4) அரசாங்க சபையின் அனைத்து உறுப்பினர்களையும் உள்ளடக்கிய நிறைவேற்றுக் குழுக்கள் நிறைவேற்று அதிகாரங்களை நடைமுறைப்படுத்தியமை.
5) ஏகாதிபத்திய நலன்களை பாதுகாக்கும் மூன்று அரசகாரியதரிசிகளையும் உள்ளடக்கிய அரசாங்க சபையை அறிமுகம் செய்தமை. (………..)

➢ **16 தொடக்கம் 25 வரையிலான வினாக்கள் ஒவ்வொன்றும் வினாவின் தலைப்புடன் தொடர்பான கூற்றுக்களைக் கொண்டுள்ளது. இவற்றுள் சரியான கூற்றினை அல்லது கூற்றுக்களின் தொகுதியைக் கொண்ட விடையைத் தெரிவு செய்க.**

16. சோல்பரி அரசியலமைப்பானது.

A – சிறுபான்மை சமூகங்களின் நலன்களைப் பாதுகாப்பதற்கு மிக உயர்ந்த முன்னுரிமை வழங்கியது.

B – நிறைவேற்றுக்குழு முறையை அடிப்படையாகக் கொண்ட அரசாங்க முறையை அகற்றி மந்திரி சபைமுறையை அறிமுகம் செய்தது.

C – பிரித்தானிய ஏகாதிபத்தியத்தினுள் இலங்கைக்கு டொமீனியன் அந்தஸ்தினை வழங்கியது.

D – இலங்கைக்கு பூரண சுதந்திரத்தை வழங்கியது

E – நிலப்பரப்பையும், சனத்தொகையும் அதன் பிரதிநிதித்துவ முறைக்கான அடிப்படையாக கொண்டிருந்தது.

1) ABCD 2) BCDE 3) ABDE 4) ACDE 5) ABCE (………..)

17. 1972 அரசியல் யாப்பு சீர்திருத்தங்களானவை

A – இலங்கை குடியரசின் இறைமையை மக்களுக்கு உரித்தாக்கியது.

B – சுதந்திர இலங்கையின் முதலாவது சுதேசிய யாப்பாக அடையாளப்படுத்தியது.

C – சட்டவாக்கம் பற்றிய நீதிமுன்புனராய்வை அறிமுகம் செய்தது.

D – அரசாங்கத்தின் முத்துறைகளும் சுயாதீனத் தன்மையுடன் செயற்பட வழிவகுத்தது.

E – சட்டத்துறையின் பெரும்பான்மை கட்சி உறுப்பினர்களைக் கொண்ட நிறைவேற்றுத்துறை உருவாக வழிவகுத்தது.

1) ABCD 2) BCDE 3) ABDE 4) ACDE 5) ABCE

(………..)

18. சுதந்திரமானதும், நீதியானதுமான தேர்தல்களின் பிரதான பண்புகள்.

A – கால காலத்தில் நடாத்தப்படுதல்.

B – பகுத்தறிவின் அடிப்படையில் தீர்மானம் எடுப்பதற்கு வாக்களாருக்கு பூரண சுதந்திரம் காணப்படுதல்.

C – தகுதியீனங்களை கருதாது சகலருக்கும் வாக்குரிமை வழங்குதல்.

D – தகுதி வாய்ந்த எவருக்கும் வேட்பாளராக போட்டியிட அனுமதித்தல்.

E – சகல வாக்குகளையும் கணிப்பிட்டு உரிய நேரத்தில் பெறுபேறுகளை வெளிப்படையாகவும் சரியாகவும் வெளியிடுதல்.

1) ABCD 2) BCDE 3) ABDE 4) ACDE 5) ABCE

(………..)

19. சட்டத்தின் ஆட்சியின் மூலம் வலியுறுத்தப்படும் விடங்களானவை.

A – சட்டத்தின் முன்நிலையில் சகலரும் சமமானவர்கள் என்பதாகும்.

B – பங்கீட்டு நீதியின் அடிப்படையில் சட்டம் பிரயோகிக்கப்பட வேண்டும் என்பதாகும்.

C – சட்டத்தின் சமமான பாதுகாப்புக்கு சகலருக்கும் உரித்துண்டு என்பதாகும்.

D – எவரும் சட்டத்திற்கு மேலானவர்கள் அல்ல என்பதாகும்.

E – சுயாதீனமான நீதித்துறை காணப்பட வேண்டும் என்பதாகும்.

1) ABCD 2) BCDE 3) ABDE 4) ACDE 5) ABCE (………..)

20. உலகில் காணப்படும் பல்வேறு நாடுகளின் அரசியலமைப்பின் இயல்பினை சரியாக காட்டும் சேர்மானங்களின் தொகுதி.

A – ஐக்கிய அமெரிக்க அரசியலமைப்பு அதிகார வேறாக்க கொள்கையினை பின்பற்றி தடைகள் சமன்பாடுகள் என்னும் தத்துவத்தை உள்ளடக்கியுள்ளது.

B – இந்திய அரசியலமைப்பின் பிரகாரம் இந்தியா மத்திய அரசாங்கத்தையும் 29 பிராந்தியங் களையும் 07 யூனியன பிரதேசங்களையும் உள்ளடக்கியதாகும்.

C – சுவிட்சர்லாந்து சமஸ்டி மத்திய அரசு, கன்ரன்கள், கொம்யூன் என்னும் உள்ளூராட்சி மன்றம் என்னும் மூன்று தாபனங்களை உள்ளடக்கியுள்ளது.

D – பிரான்ஸ் பலமான மத்திய அரசொன்றின் மூலம் உள்ளூராட்சி நிறுவனங்களின் தீர்மானங்கள் நிர்ணயிக்கப்படும். முறையைக் கொண்ட நாடாகும்.

E – பிரித்தானிய பாராளுமன்றத்தின் இரண்டாம் மன்றமாகிய பிரபுக்கள் சபை உலகில் உள்ள இரண்டாம் மன்றங்களுள் மிகவும் பலம் வாய்ந்ததாகும்.

1) ABCD 2) BCDE 3) ABDE 4) ACDE 5) ABCE

(………..)

21. பொதுக் கொள்கையானது

A – பொது மக்களை பாதிக்கும் பிரச்சினைகளுடன் தொடர்புபட்டதாகும்.

B – பொதுமக்களின் பிரச்சினைகளை தீர்ப்பதற்கான உபாயங்களை தீர்மானிக்கின்றது.

C – கவனமாக தெரிவுசெய்யப்பட்ட குறிப்பிட்ட இலக்குகளை அடைவதற்கு அரசாங்கத்தால் நடைமுறைப்படுத்தும் கொள்கைகளாகும்.

D – "அரச கொள்கை கோட்பாடுகள்" என்ற தலைப்புடன் சில நாடுகளின் அரசியல் யாப்புக்களில் சேர்க்கப்பட்டுள்ள கொள்கைகளாகும்.

E – அரசாங்கத்தால் மேற்கொள்ளப்படும் செயற்பாட்டு திட்டங்களாக காணப்படுகின்றது.

1) ABCD    2) BCDE    3) ABDE    4) ACDE    5) ABCE

(………..)

22. இலங்கையின் அரசியல்கட்சி முறையானது.

A – இரண்டு பிரதான கட்சிகள் ஆதிக்கம் பெறும் பல கட்சி முறையாகும்.

B – பிரமுகர் (காடார்) கட்சிகளை மட்டும் கொண்ட பல கட்சி முறையாகும்.

C – இனத்துவ அடிப்படையில் அமைந்த சில கட்சிகளையும் உள்ளடக்கிய பல கட்சி முறையாகும்.

D – சமமான முறையில் பலம்வாய்ந்த பல கட்சிகளைக் கொண்ட பல கட்சி முறையாகும்.

E – முதலாழித்துவ, சோஷலிச, சமூக ஜனநாயக கட்சிகளை கொண்ட பல கட்சி முறையினதாகும்

1) A மற்றும் B    2) B மற்றும் C    3) C மற்றும் D

4) A,C மற்றும் E    5) A,C,D மற்றும் E    (………..)

23. சர்வதேச அரசியலில் அரசசார்பு செயற்பாட்டாளர்கள் உள்ளடங்கும அமைப்புக்களாவன.

A – ஐக்கிய நாடுகள் ஸ்தாபனம்.

B – ஆசியான் அமைப்பு

C – சர்வதேச மன்னிப்புச் சபை

D – ஐரோப்பிய ஒன்றியம்

E – சர்வதேச செஞ்சிலுவை சங்கம்

1) A மற்றும் B    2) A மற்றும் D    3) B மற்றும் C    4) B மற்றும் E    5) A,B மற்றும் D

(………..)

24. இலங்கையின் வெளிநாட்டுக் கொள்கையை உருவாக்கும் போது இலங்கை எதிர்நோக்குகின்ற சவால்களாவன.

A – நிலப்பரப்பில் சிறிய அரசாகக் காணப்படல்.

B – பொருளாதார மற்றும் பௌதீக பலம் குறைவாக காணப்படல்.

C – பிராந்திய மற்றும் சர்வதேச வலுச்சமநிலை.

D – பொது நலனை அடிப்படையாகக் கொண்ட தேசிய கருத்தியல் ஒன்று காணப்படாமை.

E – உள்ளக சமூக, அரசியல் பார்வைகள் மற்றும் கருத்தியல்கள்

1) A மற்றும் B    2) B மற்றும் C    3) C மற்றும் D

4) A,B,C மற்றும் E    5) B,C,D மற்றும் E    (………..)

25. 1978ம் ஆண்டு மூல அரசியலமைப்பு இலங்கை அரசியல் முறைக்கு அறிமுகம் செய்த பிரதானமான மாற்றங்கள்.

A – பலமானதும் சுதந்திரமானதுமான நிறைவேற்றுத்துறை.

B – சட்டவாக்க அதிகாரம் மதிப்பிறக்கம் செய்யப்பட்ட சட்டத்துறை.

C – நீதிப்புனராய்வு அதிகாரம் பெற்ற பலமான நீதித்துறை.

D – கொள்கை வகுப்பில் மக்கள் நேரடியாக பங்கேற்கக்கூடிய மக்கள் தீர்ப்பு வாக்கெடுப்பு.

E – அரசின் ஒற்றையாட்சி தன்மையை மாற்றியமை

1) A,B,C  2) A,B,D  3) B,C,D  4) A,B,C,D  5) B,C,D,E

(………..)

❖ **26 தொடக்கம் 30 வரையிலான வினாக்கள் ஒவ்வொன்றும் இரு கூற்றுக்களை கொண்டுள்ளன. கீழே தரப்பட்டுள்ள அட்டவணையில் வழங்கப்பட்டுள்ள 1,2,3,4,5 ஆகிய விடைகளில் இருந்து தரப்பட்டுள்ள இரு கூற்றுகளுக்கும் மிகச் சரியாக பொருந்தும் விடை இலக்கத்தினை தெரிவு செய்து அடைப்புக்குறிக்குள் எழுதுக.**

| இலக்கம் | முதலாவது கூற்று | இரண்டாவது கூற்று |
|---|---|---|
| (1) | உண்மை | உண்மை |
| (2) | உண்மை | பொய் |
| (3) | பொய் | உண்மை |
| (4) | பொய் | பொய் |
| (5) | உண்மை | உண்மையாக இருப்பதுடன் முதல் கூற்றை மேலும் விபரிக்கின்றது |

| | முதலாவது கூற்று | இரண்டாவது கூற்று |
|---|---|---|
| 26. | சோல்பரி யாப்பில் காணப்பட்ட பாராளுமன்றத்தின் இரண்டாம் மன்றம் 1972ம் ஆண்டு முதலாம் குடியரசு யாப்பில் இல்லாது ஒழிக்கப்பட்டது. | 1972ம் ஆண்டு அரசியல் யாப்பு நிர்ணய சபை உறுப்பினர்கள் சட்டவாக்கத்தில் மக்களால் தெரிவு செய்யப்படாத உறுப்பினர்களை கொண்ட சபை காணப்படக்கூடாது என்ற நம்பிக்கையை கொண்டிருந்தனர். (………..) |
| 27. | 1978ம் ஆண்டு அரசியலமைப்பின் மூலம் வழங்கப்பட்ட அடிப்படை உரிமைகளில் வாழும் உரிமையும் ஒரு முக்கியமான உரிமையாக முதல் முதலாக அடையாளப் படுத்தப்பட்டுள்ளது. | 1978ம் ஆண்டு அரசியலமைப்பில் அடிப்படை உரிமைகளை பாதுகாப்பதற்கு உயர் நீதிமன்றம், ஓம்புட்ஸ்மன், மனித உரிமைகள் ஆணைக்குழு ஆகிய மூன்று பொறிமுறைகள் ஸ்தாபிக்கப்பட் டுள்ளன. (………..) |
| 28. | 1978 மூல யாப்பின்படி பாராளுமன்றத்தின் முதலாவது அமர்வில் இருந்து ஒருவருடம் சென்றபின்னர் பாராளுமன்றத்தை கலைக்கும் அதிகாரம் ஜனாதிபதிக்கு வழங்கப்பட்டிருந்தது. இக் காலஎல்லை 19ம் திருத்தப்படி 4½ வருடங்களாக மாற்றியமைக்கப்பட்டது. | 1978ம் ஆண்டு மூல யாப்பின் கீழ் பாராளுமன்றத்தால் நிராகரிக்கப்படும் ஒரு சட்டத்தை (யாப்பு சட்டம் அல்லாத) மக்கள் தீர்ப்பிற்கு விடும் ஜனாதிபதிக்கு இருந்த அதிகாரம் 19ம் திருத்தப்படி இல்லது ஒழிக்கப்பட்டது. (………..) |
| 29. | 1978ம் ஆண்டு அரசியலமைப்பின் 18வது அரசியலமைப்பு திருத்தத்தில் அரசியலமைப்பு பேரவை நீக்கப்பட்டு பாராளுமன்றப் பேரவை உருவாக்கப்பட்டது. | பாராளுமன்ற பேரவையானது ஐந்து உறுப்பினர்களைக் கொண்டிருந்ததுடன் இவர்களில் பாராளுமன்ற உறுப்பினர்களும், சிவில் சமூக பிரதிநிதிகளும் அங்கத்தவர்களாக காணப்பட்டனர். (………..) |
| 30. | இலங்கை 1955-1960 காலப்பகுதியில் ஐக்கிய நாடுகள் ஸ்தாபனத்தின் பாதுகாப்புச் சபையில் உத்தியோகபூர்வ உறுப்புரிமையை பெற்றது. | 1960 ஆண்டு முதல் இலங்கை பொதுநலவாய அமைப்பில் உறுப்புரிமையை பெற்றுக்கொண்டது. பொதுநலவாய அமைப்பின் தலைவராக ஸ்ரீமாவோ பண்டாரநாயக்கா தெரிவு செய்யப்பட்டார். (………..) |

## பகுதி - B

31. ஒற்றையாட்சி நாடுகளில் மத்தியில் இருந்து கீழ்மட்டத்திற்கு அதிகாரத்தை பரவலாக்குதல் மூன்று முறைகளில் இடம்பெறுகின்றன. அவற்றுள் **இரண்டு** முறைகளைக் குறிப்பிடுக?

   1. ……………………………………………………………………………………………………

   2. ……………………………………………………………………………………………………

   .

32. அரசியல் கட்சி முறைகள் ஐந்தாக வகைப்படுத்தப்பட்டுள்ளன. இவற்றுள் இரு கட்சி முறையினை பின்பற்றும் நாடுகள் **இரண்டினைக்** குறிப்பிடுக.

   1. ……………………………………………………………………………………………………

   2. ……………………………………………………………………………………………………

33. பின்வரும் பண்புகள பொருந்துகின்ற அரசியல் கருத்தியல்கள் **இரண்டையும்** முறையே குறிப்பிடுக.

   1. அரசு பொதுநல ஸ்தாபனம்

      ……………………………………………………………………………………………………

   2. அரசு சர்வ வல்லமை படைத்தது.

      ……………………………………………………………………………………………………

34. பெண்ணியல்வாத இயக்கம் மற்றும் சிந்தனைகளில் பிரதானமாக ஐந்து துறைகள் காணப்படு கின்றன. இவற்றுள் **இரண்டினைக்** குறிப்பிடுக.

   1. ……………………………………………………………………………………………………

   2. ……………………………………………………………………………………………………

35. தேசியவாதம் கருத்தியலாகவும், அரசியல் இயக்கமாகவும் இரு பிரதான தன்மைகளைக் கொண்டுள்ளது அவ் **இரு** முறைகளையும் குறிப்பிடுக.

   1. ……………………………………………………………………………………………………

   2. ……………………………………………………………………………………………………

36. அரசியல் விஞ்ஞானம் ஒரு கற்கை துறையாக உருப்பெற இரு கிரேக்க அரசியல் தத்துவ ஞானிகள் பங்காற்றியுள்ளனர். அவர்கள் **இருவரையும்** குறிப்பிடுக.

   1. ……………………………………………………………………………………………………

   2. ……………………………………………………………………………………………………

37. அரசியலைக் கற்றல் என்பதில் இரு அர்த்தங்கள் காணப்படுகின்றன. அவை **இரண்டையும்** குறிப்பிடுக.

   1) ……………………………………………………………………………………………………

   2) ……………………………………………………………………………………………………

38. முரண்பாட்டு (மோதல்) தீர்வு செயல்முறையில் பயன்படுத்தப்படும் அடிப்படை ஊடகங்கள் நானகு காணப்படுகின்றன. அவற்றுள் **இரண்டினைக்** குறிப்பிடுக.

1) ……………………………………………………………………………………………………

2) ……………………………………………………………………………………………………

39. உலக வரலாற்றில் காலனித்துவம் தோற்றம் பெறுவதற்கு இரு வழிமுறைகள் காணப்படுகின்றன. அவ் **இரு** வழிமுறைகளையும் குறிப்பிடுக.

1) ……………………………………………………………………………………………………

2) ……………………………………………………………………………………………………

40. 1) அரசின் இறைமை அதிகாரம் பகிர்வதை அல்லது ஒன்று குவிக்கப்படுவதை அடிப்படையாகக் கொண்டு அமைந்துள்ள அரசியலமைப்பு முறைகளுள் **ஒன்றினை** குறிப்பிடுக.?

2) நிறைவேற்று அதிகாரம் ஒழுங்கமைத்திருக்கும் முறையின் அடிப்படையிலான அரசியலமைப்பு முறைகளுள் **ஒன்றினை** குறிப்பிடுக.?

1) ……………………………………………………………………………………………

2) ……………………………………………………………………………………………

41. இலங்கையில் 1) தெரிவுசெய்யப்பட்ட பிரதிநிதிகளை மட்டுமுடைய சட்டத்துறை உருவாக வழிவகுத்த அரசியலமைப்பை குறிப்பிடுக.

……………………………………………………………………………………

2) சட்டமன்றின் உறுப்பினர்களின் தெரிவினை தேர்தல் மாவட்ட முறையின் அடிப்படையில் மாற்றியமைத்த அரசியலமைப்பை குறிப்பிடுக.

1) ……………………………………………………………………………

2) ……………………………………………………………………………

42. இலங்கையில் 1) வரையறுக்கப்பட்ட வாக்குரிமையின் அறிமுகம்

2) வகுப்பு வாரி பிரதிநிதித்துவ முறையின் ஒழிப்பு

மேற்குறிப்பிட்ட இரு நிகழ்வுகளுடனும் தொடர்புடைய அரசியலமைப்பு சீர்திருத்தங்களைக் குறிப்பிடுக.

1) ……………………………………………………………………………………………………

2) ……………………………………………………………………………………………………

43. இலங்கையில் 1) ஐக்கிய ஆட்சிமுறை ஏற்படுத்தப்பட்டமை
2) ஒற்றையாட்சி அரசாக பிரகடனப்படுத்தப்பட்டமை

ஆகிய நிகழ்வுகளுடன் தொடர்புபட்ட இரு அரசியலமைப்பு / அரசியலமைப்பு சீர்திருத்தங்களைக் குறிப்பிடுக.

1) …………………………………………………………………………………………………

2) …………………………………………………………………………………………………

44. 1) 1972 முதலாம் குடியரசு யாப்பு
2) 1978 இரண்டாம குடியரசு யாப்பு

என்பவற்றில் நீதி முன் புனராய்வு அதிகாரம் ஒப்படைக்கப்பட்ட நீதி நிறுவனங்களை குறிப்பிடுக.

1) …………………………………………………………………………………………………

2) …………………………………………………………………………………………………

45. 1) "சோஷலிச ஜனநாயக அரசியலமைப்பு"
2) "ஆசியாவின் கோலிச முறை"

என்னும் சொற்பதங்களால் விபரிக்கப்படுகின்ற இலங்கையின் அரசியலமைப்புக்களை முறையே குறிப்பிடுக.

1) …………………………………………………………………………………………………

2) …………………………………………………………………………………………………

46. 1) இலங்கையின் முதலாவது இடதுசாரிக் கட்சியையும் அது உருவாக்கப்பட்ட ஆண்டினையும் குறிப்பிடுக.
2) இலங்கையில் திறந்த பொருளாதாரக் கொள்கையை அறிமுகம் செய்த அரசியல் கட்சியையும் இக்கொள்கை அறிமுகப்படுத்தப்பட்ட ஆண்டினையும் குறிப்பிடுக.

1) …………………………………………………………………………………………………

2) …………………………………………………………………………………………………

47. 1) ஐக்கிய தேசியக்கட்சி
2) ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி

என்பவை உருவாக்கப்பட்டபோது அடிப்படையாகக் கொள்ளப்பட்ட அரசியல் மற்றும் பொருளாதாரக் கருத்தியல்கள் எவை

1) …………………………………………………………………………………………………

2) …………………………………………………………………………………………………

48. 1978 அரசியலமைப்பில் 13வது திருத்தத்தில் மாகாண சபை முறை கொண்டு வரப்பட்டமைக்கான அடிப்படை காரணிகளாக இரு காரணிகள் காணப்படுகின்றன. அவ் **இரு** காரணிகளையும் குறிப்பிடுக.

1) ……………………………………………………………………………………………………

2) ……………………………………………………………………………………………………

49. பின்வரும் பண்புகள் பொருந்துகின்ற அரசமுறை / ஆட்சி முறைகளை முறையே குறிப்பிடுக.

1) பரம்பரை முறையில் அரசத்துவத்திற்கு உரிமை கோரும் தனிநபரினால் மேற்கொள்ளப்படும் ஆட்சி

2) மக்களின் பிரதிநிதிகள் மூலம் கொண்டு நடாத்தப்படும் ஆட்சி

1) ……………………………………………………………………………………………

2) ……………………………………………………………………………………………

50. பொதுக்கொள்கை வாழ்க்கை வட்டமானது பலகட்டங்களை உள்ளடக்கிய ஒரு செயல்முறையாகும். இவற்றுள் எவையேனும் இரண்டு கட்டங்களை பெயரிடுக.

1) ……………………………………………………………………………………………………

2) ……………………………………………………………………………………………………

# தொண்டைமானாறு வெளிக்கள நிலையம் நடாத்தும்
## ஆறாம் தவணைப் பரீட்சை - 2021
# Conducted by Field Work Centre, Thondaimanaru.
# 6th Term Examination – 2021

FWC

| | | | | |
|---|---|---|---|---|
| அரசியல் விஞ்ஞானம் II<br>Political Science II | Three Hours<br>Gr -13 (2021) | 23 | T | II |

❖ **இவ்வினாத்தாள் I, II, III என *மூன்று* பகுதிகளைக் கொண்டுள்ளது.** பகுதி 1 லிருந்து குறைந்தபட்சம் ஒரு வினாவும் பகுதி இரண்டிலிருந்து குறைந்த பட்சம் இரண்டு வினாக்களும் பகுதி 3 லிருந்து குறைந்தபட்சம் ஒரு வினாவும் தெரிவு செய்தல் வேண்டும். மற்றும் பகுதி 1, 2, 3 என்பவற்றில் இருந்து விரும்பிய ஒரு வினாவினைத் தெரிவு செய்து எல்லாமாக 5 வினாக்களுக்கு விடையளிக்க வேண்டும்.

## பகுதி - I

1. **"அரசியல் என்பது பிரசைகளின் நாளாந்தப் பயன்பாடேயன்றி அது அரசியல்வாதிகளுடன் மட்டுப் படுத்தப்பட்ட ஒரு செயற்பாடு அல்ல"** இக்கூற்றின் பொருத்தப்பாட்டை ஆராய்க. *(20 புள்ளிகள்)*

2. அரசியல் கருத்தியல் என்ற வகையில் மதச் சார்பின்மை வாதத்தின் அடிப்படை அம்சங்களை ஆராய்க. *(20 புள்ளிகள்)*

3. பின்வரும் தலைப்புக்களில் எவையேனும் **இரண்டினை** ஆராய்க.
   i) பாஸிசவாத அரசு
   ii) நவதாராண்மைவாத அரசின் பண்புகள்
   iii) சமஷ்டி அரசியலமைப்பின் பண்புகள்
   iv) சமூக ஜனநாயக வாதம் (10x2=20 புள்ளிகள்)

## பகுதி - II

4. இலங்கையில் காலனித்துவ நிலைமாற்றத்துடன் தொடர்புபடுத்தி கீழ்வருவனவற்றில் **இரண்டினை** ஆராய்க.
   i) அரசியல் நிர்வாக மாற்றங்கள்
   ii) பொருளாதார மாற்றங்கள்
   iii) சமூக மாற்றங்கள்

(10x2=20 புள்ளிகள்)

5. **“1972 ஆம் ஆண்டு முதலாம் குடியரசு யாப்பு 1947ம் ஆண்டு சோல்பரி யாப்பின் தொடர்ச்சித் தன்மையைப் பேணிய அதேவேளை பலவழிகளிலும் சோல்பரி யாப்பிலிருந்து விலகியும் சென்றுள்ளது”** இதன் பொருத்தப்பாட்டை ஆராய்க. *(20 புள்ளிகள்)*

6. *1978 ஆம் ஆண்டு அரசியல் யாப்பின் கீழ் பின்வரும் தலைப்புக்களில் எவையேனும்* **இரண்டினை** *ஆராய்க.*
   i) ஒப்புட்ஸ்மன்
   ii) நிதித்துறையின் சுதந்திரம்
   iii) ஜனாதிபதியைத் தேர்ந்தெடுக்கும் வழிமுறை
   iv) பாராளுமன்றத்தின் பணிகள்

*(10x2=20 புள்ளிகள்)*

7. *1978ம் ஆண்டு யாப்பின் மீதான 18ம், 19ம் திருத்தங்களின் கீழ் ஜனாதிபதியின் நிலையை எடுத்து விளக்குக.* *(20 புள்ளிகள்)*

## பகுதி – III

8. *இந்திய அரசியலமைப்பு மரபு ரீதியான சமஷ்டி பண்புகளில் இருந்து மாறுபட்டுள்ளமைக்கான ஆதாரங்களைக் குறிப்பிட்டு விளக்குக.*

*(20 புள்ளிகள்)*

9. பின்வருவனவற்றில் இரண்டினை விளக்குக.
   i) சட்டவாட்சி
   ii) ஜனநாயகத்தேர்தல் மூலம் பாதுகாக்கப்பட வேண்டிய நியதிகள்.
   iii) முரண்பாட்டுத் தீர்வுச் செய்முறை.
   iv) பொதுக்கொள்கை உருவாக்கமும் அரச அதிகார நிறுவனங்களும்

*(10x2=20 புள்ளிகள்)*

10. பின்வரும் தலைப்புகளுள் எவையேனும் இரண்டிற்கு சிறுகுறிப்பு எழுதுக?
   i) இலங்கையின் வெளிநாட்டுக் கொள்கையில் செல்வாக்குச் செலுத்தும் காரணிகள்
   ii) இலங்கையில் அரசியற்கட்சிகளின் அண்மைக்காலப் போக்குகள்.
   iii) ஜனாதிபதி முறையின் சிறப்பியல்புகள்.
   iv) அதிகாரம் பற்றிய பெண்ணியல் வாதிகளின் போக்கு.

*(10x2=20 புள்ளிகள்)*